# பாடசாலைக் காலைக்கூட்டம்.

## (50/2019)

-----------------------------------------

* காலைக்கூட்டமானது மாணவர்களிடையே ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

* சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்ட காலைக்கூட்டமானது தேசப்பற்று மற்றும் உயர்வான குணங்களை சிறுவயதுமுதல் பயிற்றுவிப்பதற்கும் மதப் பின்னணி ஒன்றை உருவாக்குவதற்கும் உதவ வேண்டும்.

* சகல பாடசாலைகளிலும் அன்றாட நிகழ்வுகளைத் தொடங்குவதற்கு முன்னர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குபற்றலுடன் சமய நிகழ்ச்சிகளை மேற்கொண்டு காலைக்கூட்டம் நடத்தப்படல் வேண்டும்.

* பாடசாலையின் இடவசதி மற்றும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுமாயின் பிரிவு மட்டங்களில் காலைக்கூட்டத்தை நடத்தலாம்.

* சமய நிகழ்ச்சிக்குப் பின்னர் பாடசாலை கீதம் இசைக்கப்பட வேண்டியதுடன் அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவரினால் அறிவுறுத்தல் சொற்பொழிவொன்று நடத்தப்படல் வேண்டும்.

* காலைக்கூட்டம் தொடர்பாக **15** நிமிடங்கள் ஒதுக்குவது போதுமானது.

* நிகழ்வுகள் அனைத்தையும் தாமதமின்றி ஆரம்பிப்பது கடினமாக அமையுமாயின் பாடசாலைக் காலைக்கூட்டத்தை பொருத்தமான முறையில் ஏற்பாடு செய்து நடாத்துவது அதிபரின் பொறுப்பாகும்.

* செவ்வாய்,வியாழன்  மற்றும் வெள்ளிக்கிழமைக
ஆகிய மூன்று தினங்களில்
பாடசாலை மாணவர்கள் தொடர்பாக **10** நிமிடங்கள் உடலியக்கத் தொடர் ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
உடற்கல்வி ஆசிரியர் ஒருவர் இல்லாதவிடத்து பொருத்தமான ஒருவர் மூலம் செயற்படுத்த வேண்டும்.

* காலைக் கூட்டம் மற்றும் உடற்பயிற்சி தொடர்பாக ஒதுக்கக்கூடிய நேரம் **15** நிமிடங்களாகும்.

மாணிக்கம்.இளங்கோ
**MEd**

# பாடசாலை பேண்ட் வாத்தியத்தைப் பயன்படுத்துதலும் விழாக்களை நடாத்துதலும் அதில் மாணவர்களைப் பங்குபெறச் செய்தலும்.

-----------------------------------------------

கல்வி அமைச்சின் **25/1995,2004/28,** மற்றும் **2019/50** ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய, பாடசாலை மாணவர்களையும், பாடசாலை பான்ட் வாத்தியக் குழுவினரையும் கலந்து கொள்ளச் செய்தல் தொடர்பாக கல்வி அமைச்சு வரையறை செய்துள்ளது.

பின்வரும் பொது நிகழ்ச்சிகளில் மட்டுமே மாணவர்களையும் பாடசாலை பான்ட் வாத்தியக் குழுவினரையும் பங்கு பற்ற கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

மத்திய கல்வி அமைச்சு/ மாகாணக் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்த பின்வரும் பொது நிகழ்ச்சிகளில்......

*தேசிய/மாகாண மட்ட விளையாட்டு விழாக்கள்.

*நிரல் கல்வி அமைச்சு/மாகாணக் கல்வித் திணைக்களம்/கலாசார நிகழ்வுகள்

*மாகாணக் கல்வித் திணைக்களம்/கல்வி அமைச்சுடன் இணைந்து மாவட்டச் செயலகங்களால் நடத்தப்படும் சுதந்திர தின விழா

*மத்திய கல்வி அமைச்சு/மாகாண கல்வித் திணைக்களம் என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட மேதகு ஜனாதிபதி/கௌரவ பிரதமர்/கௌரவ ஆளுநர்/மாகாண முதலமைச்சர் வருகை தரும் விழாக்கள்.

*வெளிநாட்டு தூதுவர்கள் வருகை தரும் விழாக்கள்.

மேலும் பின்வரும் விடயங்களிலும் அதிபர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

*பாடசாலைக்கு வெளியே அதிதிகளை வரவேற்க மாணவர்களை இரு மருங்கிலும் நிறுத்தக் கூடாது.

*வேறு தனியார் துறையினர் ஒழுங்கு செய்த விழாக்களில் மாணவர்கள் மற்றும் வாத்தியக் குழுவினரை கலந்து கொள்ள அனுமதிக்கக் கூடாது.

*பாடசாலையில் நடைபெறும் விழாக்களை ஒரு மணித்தியாலத்தினுள் கட்டுப்படுத்த வேண்டும்.

*கடைசிப் பாட வேளை ஆசிரியர்: மாணவர்கள் அனைவரும் வகுப்பறையை விட்டு வெளியேறிய பின்னரே வெளியேறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
**MEd**